TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8074738

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2024** FIR No.: மு.த.அ. எண் **05/2024** Date: நாள் **06.05.2024**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **03.05.2024** Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **06.05.2023** Time : நேரம் **15.30 Hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol – II** Time : நேரம் **17.00 Hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **38 Kms East**
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **Aathurai Village Administrative Office, Chetpet Taluk,Tiruvannamalai District .**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.S.Manikkam** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o.Sekar**
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-30** (d) Nationality : நாட்டினம் **Indian** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் **Farmer** (g) Address : முகவரி **No.1841, Panndara Kinnatru St, Aathurai Village, Chetpet Taluk, Tiruvannamalai District,**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**Tr.Silambrasan, Village Administrative Officer, Aathurai Village, Chetpet TK, Tiruvannamalai Dt.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: ------
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

------

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

------

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் கோ.மைதிலி ஆகிய நான் 06.05.2024 ஆம் தேதி மாலை 15.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் மேலொப்பம் செய்த கொடுத்த புகார்தாரார் S.மாணிக்கம் (வயது-30), த/பெ.சேகர் நெ.1841, பண்டார கிணற்றுத் தெரு, ஆத்துரை கிராமம் & அஞ்சல், சேத்துப்பட்டு தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் என்பவரின் புகார் மனுவை பெற்று பார்க்க விடுநர், S.மாணிக்கம், (வயது-30), த/பெ. சேகர், நெ.1841, பண்டார கிணற்றுத் தெரு, ஆத்துரை கிராமம் & அஞ்சல், சேத்துப்பட்டு தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். செல்:8248324885. பெறுநர் உயர்திரு. காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு திருவண்ணாமலை. அய்யா, நான் திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு தாலுக்கா, ஆத்துரை கிராமத்தில் என் குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். எனது மனைவி பெயர் கோமதி, என்னுடன் வயதான தந்தை சேகர், தாயார் உஷா ஆகியோர் வசித்து வருகிறார்கள். நாங்கள் எங்களுக்கு சொந்தமான 2 ஏக்கர் 75 செண்ட் நிலத்தில் விவசாயம் செய்து ஜீவனம் செய்துவருகிறோம். என்னுடன் பிறந்த 3 அண்ணன்களுக்கும் திருமணமாகி தனித்தனியாக வசித்து வருகிறார்கள். நான் Diploma EEE படித்து முடித்து எலெக்டிரிஷியன் ஆகவும் பணி செய்து பின்னர் வேலை கிடைக்காத காரணத்தினால் எனது வயதான தாய் தந்தைக்கு உதவியாக உடனிருந்து விவசாய வேலைகளை

- இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Manikkam.S
06/05/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 6.5.2024
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
06.05.2024 at 17.50hrs.

Name: பெயர் G. MYTHILY
Rank: நிலை Inspector of Police No. எண் ..........
V&AC, Tiruvannamalai

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

செய்து வருகிறேன். எனது தந்தைக்கு குடும்ப கடன் அடைக்க உடனிருந்து விவசாயம் செய்து உதவி செய்த காரணத்தினால் மேற்படி மொத்த நிலமான 2 ஏக்கர் 75 சென்ட் நிலத்தில் 50 சென்ட் நிலத்தை எனது தந்தை கடந்த 25.10.2023 அன்று சேத்துப்பட்டு சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3979/2023 நாள்.25.10.2023 –ன்படி எனக்கு கிரையம் கொடுத்தார். மேற்படி நான் கிரையம் பெற்ற 50 சென்ட் நிலத்தை எனது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய கடந்த 13.02.2024 –ந்தேதி இ-சேவை மையத்தில் ஆன்லைனில் விண்ணப்பித்தேன். பிறகு ஒரு வாரம் கழித்து ஆத்துரை கிராம உதவியாளர் திருமதி.பூங்கொடி என்பவர் எனக்கு போன் செய்து கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வருமாறு கூறினார். நான் மேற்படி அலுவலகத்திற்கு சென்று VAO திரு.சிலம்பரசன் அவர்களை சந்தித்து நான் விண்ணப்பித்த பட்டா பெயர் மாற்றம் சம்மந்தமாக கேட்டபோது அவர் என்னிடம் அலுவலக செலவிற்கு ரூ.3,000/- கொடுக்கும்படி கேட்டார் அப்போது அவரது அருகில் திருமதி.பூங்கொடி கிராம உதவியாளர் அவர்களும் உடன் இருந்தார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், அரசிற்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்திவிட்டேன் என்றும் கூறி நானே ஓர் விவசாய கூலி என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறி வந்துவிட்டேன். பின்னர் கடந்த 03.05.2024 –ந்தேதி வெள்ளிக்கிழமை காலை சுமார் 10.30 மணியளவில் ஆத்துரை கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று மீண்டும் எனது பட்டா பெயர் மாற்றம் குறித்து கேட்பதற்காக சென்றபோது அலுவலகத்தில் இருந்த கிராம உதவியாளர் திருமதி.பூங்கொடி அவர்களை சந்தித்து எனது பட்டா பெயர் மாற்றம் பற்றி நான் கேட்டதற்கு அவர்கள் VAO சிலம்பரசன் அவர்கள் வெளியே சென்றுள்ளார் என்றும், நீங்கள் வந்தால் அவர் ஏற்கனவே கேட்ட ரூ.3,000/- இலஞ்ச பணம் வாங்கி வைக்குமாறு சொன்னார். அதற்கு நான் VAO எங்கே என்று கேட்க அவர் தேவிகாபுரம் வரை சென்றுள்ளார் என்று கூறினார். நான் அதற்கு அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று சொல்லியதற்கு இலஞ்ச பணம் ரூ.3,000/- கொடுக்கவில்லை என்றால் உன்னுடைய பட்டா பெயர் மாற்றம் விண்ணபத்தினை நிராகரிப்பு செய்துவிடுவார்கள் என்று திருமதி.பூங்கொடி கூறினார். நான் பதில் எதுவும் கூறாமல் வெளியே வந்துவிட்டேன். பின்னர் VAO அலுவலகத்திற்கு வந்து VAO வை பார்க்க முடியாததால் அன்று மாலை சுமார் 4.15 மணிக்கு என்னுடைய கைபேசி எண்.8248324885 –ல் இருந்து கிராம நிர்வாக அலுவலர் திரு.சிலம்பரசன் என்பவரது கைபேசி எண்.7200442427 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு என்னுடைய பட்டா பெயர் மாற்றம் சம்மந்தமாக கேட்டபோது அவர் உனக்கு எந்தனை முறை தான் சொல்ல வேண்டும் என்று கூறி தேவிகாபுரம் EB ஆபீஸ் அருகில் வா என்று கூறினார். நானும் உடனே கிளம்பி தேவிகாபுரம் EB ஆபீஸ் அருகில் சென்று சுமார் 4.45 மணிக்கு அவரை பார்த்தபோது அவர் என்னிடம் உனது பட்டா பெயர் மாற்றத்திற்கு இலஞ்சமாக ரூ.3,000/- ம் கொடுத்தால் தான் உன்னுடைய பட்டா பெயர் மாற்றத்திற்கு பரிந்துரை செய்ய முடியும் என்று கராராக கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். என்னிடம் பணம் ரூபாய். ரூ.3,000/- இலஞ்சமாக கேட்ட ஆத்துரை கிராம நிர்வாக அலுவலர் திரு.சிலம்பரசன் என்பவருக்கு இலங்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாததால் புகார் மனு தயார் செய்து கொண்டு இன்று 06.05.2024-ந்தேதி திருவண்ணாமலை இலஞ்ச இலஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு நேரில் வந்து புகார் மனு அளிக்கிறேன். மேலும்

என்னிடம் இலஞ்சம் கேட்ட கிராம நிர்வாக அலுவலர் திரு.சிலம்பரசன் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு அய்யா அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd XXXXX) Manikkam.S 06.05.2024.

Sir,

Received the complaint on 06.05.2024 at 15.30 Hrs., after due verification, Inspr Tmt.G.Mythily to Register a case. Sd/- xxxxxxxxxxx (S.Velmurugan) 06/05/2024. Dy. Supdt. of Police, V&AC, Tiruvannamalai District.

Sir,

Received the complaint on 06.05.2024 at 15.30 Hrs. after verifying the antecedents of the accused and credibility of the complainant, I have registered a case in Tiruvannamalai V&AC Cr.No.05/2024 u/s 7 of P.C. Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 06.05.2024 at 17.00 hrs. Sd/- xxxxx (G.Mythily) 06/05/2024 Inspector of Police, Vigilance & Anti-Corruption, Tiruvannamalai.

The FIR in original along with the complaint and its enclosure sent to the Hon'ble CJM and Special Judge, Tiruvannamalai and other copies to the Officers concerned

06.05.2024

(G.MYTHILY)
Inspector of Police
V&AC, Tiruvannamalai.